# அரையாண்டுப்பொதுத்தேர்வு – திசம்பர் 2017

## மேனிலையிரண்டாமாண்டு பொதுத்தமிழ் முதற்றாள்

**காலம்: 3 மணி** **விடைக்குறிப்பு** **மதிப்பெண்கள்: 100**

| முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, நா.ம.மே.பள்ளி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர்மாவட்டம். | | |
|---|---|---|
| **I** | **எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடைதருக.** | 4 x 2 = 8 |
| 1 | தலைவி தலைவனொடு உடன்சென்றுவிட்டதை அறிந்த நற்றாய், 'தன்மகள் அவளதுகணவனொடு தன்மனைக்கு மீண்டும் வருதல்வேண்டும்' என்னும் கூற்றைப் பாடுபொருளாகக்கொண்ட பத்துப்பாடல்களின் தொகுதியாகும். | 2 |
| 2 | வினைத்திட்பம் இல்லாதவரை, அவர் ஏனைய பிறதிட்பங்கள் உடையவ ராயினும் உயர்ந்தோர் அவரை விரும்பியேற்கமாட்டார்கள். | 2 |
| 3 | * தமிழவேள் உமாமகேசுவரனார் வேண்டியதற்கிணங்க, அ.வரதநஞ்சையப் பிள்ளை தமிழரசி குறவஞ்சியை இயற்றினார்.<br>* கரந்தைத்தமிழ்ச்சங்க வெள்ளிவிழாவில் அந்நூலை ஞானியாரடிகள் தலைமையில் அறங்கேற்றினார். | 1<br>1 |
| 4 | தண்பொருநை / தாமிரபரணி, சிற்றாறு, கோதண்டராமநதி | 2 |
| 5 | தீயின்குழம்புகள், செழும்பொன்காய்ச்சியோடவிட்ட ஓடைகள், வெம்மையின்றி எரியும் தங்கத்தீவுகள், நீலப்பொய்கைகள், கரியபெரும்பூதம், நீலப்பொய்கை யில் மிதந்திடும் தங்கத்தோணிகள், பொன்னாலான கரைகொண்ட கருஞ்சிக ரங்கள், இருட்கடலில் மிதக்கும் திமிங்கிலங்கள். **(எவையேனும் நான்கு)** | 2 |
| 6 | * சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் தோன்றியவர். இயற்பெயர் நம்பியாரூரார், பெற்றோர் சடையனார் - இசைஞானியார்.<br>* சிவபெருமான் இவரொடு நட்புக்கொண்டதால் 'தம்பிரான்தோழர்' எனப்பட்டார் | 1<br>1 |
| **II.** | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக.** | 3 x 4 = 12 |
| 7 | * இந்தியா எமக்கே உரிமையான நாடாகும் என்று நாள்தோறும் இந்தியர் போற்றிப்பாடவேண்டும்.<br>* இந்தநாட்டை உரிமைகொண்டாடமுடியாத அந்நியர்வந்து ஆள, பொறுப்பற்று இந்தியர் வாழ்ந்திருந்த காலங்கள் கழிந்தன.<br>* வந்தவரையும்போனவரையும் 'நம்வாழ்வுமலர உதவமாட்டார்களா' என்றிருந்த காலங்கள் மறைந்தன.<br>* இன்றுமுதல் இந்தியரனைவரும் இந்தியா எமக்கேயுரிமையானநாடு என்னும் எண்ணத்தைக்கொள்ளவேண்டும். | 1<br>1<br>1<br>1 |
| 8 | * "ஈரம்பொருந்தியதோலை எண்ணெயிலே தோய்த்ததுபோல, கருமையான சிறகுகளைக்கொண்ட வௌவால் பகல்முழுவதும் தான்தங்கியிருந்த மரத்தைத் தனித்திருக்கவிட்டுப் பழங்களைநாடி மாலையில் சென்றுவிடும்.<br>* முல்லைக்கொடியில் அரும்புகள், மணமகளின் கூந்தலைப்போல் மணம்பரப்பி வண்டுக்கூட்டம் வேறிடம்செல்லாது தடுத்துக்கொண்டிருக்கும்.<br>* அத்தகைய கார்காலம்வந்தபின்னும், சொல்லிச்சென்ற தலைவன் வரவில்லை அவர் நம்மிடம்வந்தாலும் வராவிட்டாலும் அவர்க்கு இன்பமாய் அமையும் போலும். அவர் வாழ்க!<br>* என்றுகூறி தன் கண்கள்சிவக்குமாறு அழுதழுது ஆற்றுதற்கு அரிய துன்பமுடையவளானாள் தலைவி", என்றான் பாணன். | 1<br>1<br>1<br>1 |
| 9 | * முன்நிகழ்ந்ததையும் இப்பொழுதுநிகழ்வதையும் அறிந்துநடப்பதுமட்டுமன்றி பின்னர்நிகழவிருப்பதையும் ஆய்ந்துணர்ந்து அதற்கேற்ப தம்வாழ்க்கையை அமைத்துக்கொள்பவரே அறிவுடையாராவர். | 2 |

| | | |
|---|---|---|
| | * எதிரியை வென்று வெற்றிகொள்வதற்கு அஞ்சாமை தேவை. ஆனால், பழி பாவம் கேடு முதலானவை நேர்வதற்குரிய செயல்களைச்செய்ய அஞ்சாது இருப்பது பேதைமையாகும்., அதைச்செய்ய அஞ்சுபவரே அறிவுடையாராவர். | 2 |
| 10 | * நீதிதவறிய மன்னனையுடைய இம்மதுரையின்கண் கற்புடையமகளிரும் உள்ளனரோ?<br>* தம் உள்ளத்தின்கண் கொண்டகணவருடைய மிகுந்தகுறைகளைப் பொறுத்துக்கொள்கின்ற கற்புடைய மகளிரும் உள்ளனரோ?<br>* இம்மதுரைப்பதியிடத்தே பிறர்பெற்ற குழந்தையினைத் தாங்கிவளர்க்கின்ற சான்றோர்களும் உள்ளனரோ?<br>* என் கணவனை கூரியவாளால் வெட்டியதால், செங்கோல்வளைந்த பாண்டிய மன்னனுடைய இம்மதுரைநகரில் தெய்வமும் உள்ளதோ? | 1<br>1<br>1<br>1 |
| 11 | * அடா! கொடியவனே, உன் வலிமையெல்லாம் உன்கையிலுள்ள வேலாயுதத்தால் பெறும் வலிமையாகும்.<br>* நானோ, தக்கசமயத்தில் உதவிபுரியும் தனக்கு ஒப்பில்லாத கடவுளின் துணையை உடையவன்.<br>* கடவுளின் துணைகொண்டு உன்னை எதிர்த்துப் போர்புரிய வந்துள்ளேன்.<br>* அக்கடவுளின் கைப்பலத்தால் நான் விரைவில் உன்னைக்கொன்று உன் உடலைப் பறவைகளுக்கு இரையாகத்தருவேன். | 1<br>1<br>1<br>1 |
| **III.** | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக.** | **3 x 4 = 12** |
| 12 | * தன்சடையில் பிறைமதிசூடியசிவனும்,பிரம்மனும்,இந்திரனும் வழிபடும்மலை<br>* முனிவரும் தேவரும் காலையும் மாலையும் தம் அறிவில் வைத்துப் போற்றும் பெருமைக்குரியது திருவேங்கடமலை.<br>* கை மலையால் கடலைக்கடைந்த பெருமாள் உறையும் திருவேங்கடம்<br>* உயிர்கட்குக் காரணமாகவும் தாய்தந்தையாகவும் ஆதிப்பெருந் தெய்வமாகவும் விளங்கும் திருமால் தங்கிவாழ்வது திருவேங்கடமலை. | 1<br>1<br>1<br>1 |
| 13 | * சுவடிச்சாலையில் பல்கலைக்கழகத்தில் பல்துறைநூல்கள் இருப்பதுபோல தமிழர்களுக்கு அவர்கள் தாய்மொழியில் எழுதப்பட்ட நூல்கள் வேண்டும்.<br>* நல்ல தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட, தமிழில் இல்லாத பிறமொழி நூல்கள் இடம்பெறல்வேண்டும்.<br>* செந்தமிழில் யாக்கப்பட்ட அமுதம் போன்ற இனிய கவிதை நூல்கள் இடம்பெறல்வேண்டும்.<br>* அழகிய உரைநடையில் எழுந்த கருத்தமைந்த நூல்கள் பெருமளவில் இடம்பெறல்வேண்டும். அவற்றைப் பொருள்வாரியாய் வைத்தல்வேண்டும். | 1<br>1<br>1<br>1 |
| 14 | * சிக்கனத்தோடு வாழ்ந்தால் சீரோடும் சிறப்போடும் விளங்கலாம்.<br>* சிக்கனம் நீரூற்றைப்போல் தொடர்ந்து பயனளிக்கும்.<br>* சிக்கனத்தோடு வாழ்பவர்க்கு ஏற்படும் துன்பமெல்லாம் பாறாங்கல்மீது விழும் மழைநீர்போல உடனே விலகி ஓடிவிடும்.<br>* ஆதலால், சிக்கனந்தான் ஒருவனுக்குச் சிறந்த சொத்தாகும். | 1<br>1<br>1<br>1 |
| 15 | * அறிஞருள்ளும் சிறந்த அறிஞர்க்கும் மேலான அறிவை உடையோய்!<br>* கந்தருவர் உன் இருபக்கங்களிலும் நின்று கவரிகளை அசைப்பர்.<br>* நீ அரியணையில் அமர்ந்தருளி, திருவொளிமண்டிலங்கள் மூன்றும் விளங்கி ஒளிரவும், சந்திரமண்டிலம் போன்ற வட்டவடிவிலாகிய முக்குடைகள் கவிழ்ந்து நிழல்தரவும்<br>* தேவர்கூட்டமாகிய நல்லவையினர் கேட்டுத்தெளியும்படி மூன்று ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளினாய். உன் இணையடி பணிவோம். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| **16** | * புத்தன் அறிவானவன், தூய்மையானவன், அருளுடையவன், பழைமையா னவன், உயர்ந்த துறவுடையவன், என் அரசனாக உள்ளவன்<br>* காமம், வெகுளி, மயக்கம் நீக்கியவன். சினமும் பகையும் நீக்கியவன்.<br>* மெய்ப்பொருள் உணர்ந்த முதல்வன். காமம் வென்று ஐம்பொறி அடக்கி உயிர்களைக் காத்தவன்.<br>* ஆயிரம் ஆரக்கால்களைக்கொண்ட புத்தரின் திருவடியை என் ஒரே நாவினால் எவ்வாறு புகழ்வேன். | 1<br>1<br>1<br>1 |
| **IV.** | **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடைதருக.** | **1 x 8 = 8** |
| **17** | * தன்னைத் தோண்டுபவரையும் பொறுத்துக்கொள்ளும் நிலம்போலத் தம்மை இகழ்பவரையும் பொறுத்தல்<br>* தீங்கைப் பொறுத்துக்கொள்ளுதல் நன்று. அத்தீங்கை மறந்துவிடுதல் அதனினும் நன்று.<br>* வறுமையுள் வறுமை விருந்தினரை உபசரிக்காமலிருப்பது. அதுபோல, வலிமையுள் வலிமை அறிவற்றவரின் தீயசொற்களைப் பொறுத்தல்.<br>* நிறைப்பண்பு (சால்புடைமை) நீங்காமலிருக்க பொறுமைக்குணத்தைப் போற்றிப்பாதுகாத்தல்.<br>* பிறர் செய்ததீங்கைப் பொறுக்காமல் தண்டித்தவர்க்கு ஒருநாள் மட்டுமே இன்பம். பொறுத்துக்கொள்பவர்க்கு வாழ்நாள் முழுவதும் இன்பம்.<br>* தண்டித்தவர்களை உலகம் ஒருபொருட்டாக மதிக்காது. பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் போற்றும்.<br>* பிறர்செய்த தீங்கிற்காக மனம்வருந்தி மாறாக அவர்க்கு நாமும் தீங்கினைச் செய்யக்கூடாது.<br>* பிறர் மிகுதியானதுன்பத்தை நமக்குச்செய்தாலும் பொறுமையால் அதனை வெல்லவேண்டும்.<br>* பொறுமைக்குணம் கொண்டவரே துறவியரைவிட தூய்மையானவராவர்.<br>* பிறர்கூறும் இன்னாச்சொற்களைப்பொறுப்பவரே உணவுப்பசியை அடக்கி வாழும் பெரியோரைவிடச்சிறந்தவர். | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| **18** | * “தலைவரே! நான் சீதாதேவியை எதிரேசென்று வணங்குவதற்குத் தகுந்த சமயத்ததை எதிர்பார்த்திருந்தேன், அப்போது இராவணன் அங்கு வந்தான்.<br>* அவன் தன்னை விரும்புமாறு சீதாதேவியிடம் பலவாறு வேண்டி அவரை வணங்கினான். ஆனால், அவர் கடுஞ்சொற்களைக்கூற, இராவணன் அவரைக் கொன்றுவிடுவதாய் அச்சுறுத்திவிட்டு அவருக்கு அறிவுரை கூறுமாறு அரக்கியரிடம் கூறிவிட்டுச்சென்றான்.<br>* அந்நிலையில் நான் மந்திரவலிமையினால் அரக்கியர் யாவரும் மயங்கி உறங்கச்செய்தேன்.<br>* அப்போது சீதாதேவியார் ஒரு கொடியையெடுத்து, ஒரு மரக்கிளையில் உறுதியாய்க்கட்டி உயிர்விடத்துணிந்தார்.<br>* அப்பொழுது யான் அதனைத் தடுக்கக்கருதி அவர் திருவடிகளை வணங்கி இராமநாமத்தை உச்சரித்தேன்.<br>* பின், நான் வஞ்சகமில்லாதவன் என்பதனை நான்கூறிய அடையாளமொழி களால் அறிந்து தெளிந்தார்.<br>* அடுத்து, உமது மோதிரத்தை நான் காட்டவும் அவர் அதனை வாங்கித் தம் மழைபோன்ற கண்ணீரால், ஆயிரம் குடங்கொண்டு திருமஞ்சனம் செய்வதுபோல நனைந்திட வருந்திக்கொண்டிருந்தார்.<br>* ஆனால், எதுவும் கூறவில்லை. இளைத்திருந்த தம்மேனி பூரிக்க வியப்புற்றாரேயன்றி, நோக்கிய கண்களை மூடவில்லை, நீண்ட பெருமூச்செறிந்தார்”, என்று உரைத்தான் அனுமன். | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 19 | * மூலையில் கிடக்கும் வாலிபனே! தினமும் முதுகிலா வேலையைத் தேடுகிறாய்! வாழ்க்கை பாலைவனமென்று ஏன் பல்லவிபாடுகிறாய்?<br>* வெறுங்கை என்பது மூடத்தனம், விரல்கள் பத்தும் மூலதனம்.<br>* தன்னம்பிக்கைகொள். கருங்கற்பாறையும் நொறுங்கிவிழும். உன்கைகளில் இந்தப் பூமிப்பந்து சுழலும்.<br>* உன் கட்டைவிரலைவிட இமயமலை குட்டையென எடுத்துக்கூறு. உன் சுட்டுவிரலின் நகமளவிற்கு வானம் சுருங்கும்.<br>* உன் தோள்களிரண்டும் தொழிற்சாலை, நீ தொட்டால் அந்த இடம் மலர்ச்சோலை. தோல்விகள் ஏதும் உனக்கில்லை. இனி, தொடுவானமே உனது எல்லை.<br>* உன் கால்நகம் கீறிய கோடுகள்வழியே கங்கையும் சிந்துவும் ஓடிவரும். வடக்கு தெற்கு என்னும் இருதுருவங்களை உன்தோள்கள் இணைக்கட்டும்<br>* மானிடனே, நீ மண்புழுவில்லை. உன்வலிமையை வானம்வரை காட்டு.<br>* விண்ணிலும் மண்ணிலும் புதியவிளைவுகள் உண்டாகும். அவை வேலைகளல்ல வேள்விகளே.இரங்கி | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| **V.** | **பின்வரும் செய்யுளடிகளின் வினாக்களுக்கு விடையெழுதுக.** | 4 x 1 = 4 |
| 20 | அ) கபிலர்<br>ஆ) குறுந்தொகை<br>இ) (ஆரல்)மீன்<br>ஈ) ஓடுகின்றநீர் | 1<br>1<br>1<br>1 |
| 21 | **(அல்லது)** அ) பாண்டியன்பரிசு<br>ஆ) பாரதிதாசன்<br>இ) அன்னத்திடம்<br>ஈ) வேலன் | 1<br>1<br>1<br>1 |
| **VI.** | **செய்யுள் வடிவில் விடைதருக.** | 6 + 4 = 10 |
| 22 | * **வெல்வை** வேல்செயு மிடலதுன் மிடலடா நானோ<br>எல்வையா தரவியற் றெதிரி லாத்திறக் கடவுள்<br>வல்கை யோடுனை மாய்த்துடல் புட்கிரை யாக<br>ஒல்செய் வேனெனா வுடைகவண் சுழற்றின னிளையோன்<br>* பாவகை - **கலித்துறை**<br>**(குறிப்பு : பாவகை மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கலாம்)** | 4<br>2 |
| 23 | * **எழுமை** எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்<br>விழுமந் துடைத்தவர் நட்பு<br>* எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை<br>அதிர வருவதோர் **நோய்** | 2<br>2 |
| **VII.** | **இலக்கணவினாக்கள்** | |
| 24 | * **எவையேனும் இரண்டுசொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக.**<br>**(பிரித்தெழுதுதல் -1மதிப்பெண், குறிப்பெழுதுதல் -1மதிப்பெண்)**<br>**அ)** பெய்த – **பெய் + த் + அ**<br>**பெய்** –பகுதி, **த்** –இறந்தகால இடைநிலை, **அ** –பெயரெச்சவிகுதி<br>**ஆ)** ஏந்தி –**ஏந்து + இ** **ஏந்து** –பகுதி, **இ** –வினையெச்சவிகுதி<br>**இ)** புக்கேன் –**புகு(புக்கு) + ஏன்**<br>**புகு** –பகுதி, '**புக்கு**' என ஒற்று இரட்டித்து இறந்தகாலங்காட்டியது<br>**ஏன்** –தன்மையொருமை வினைமுற்றுவிகுதி<br>**ஈ)** காண்கிலர் –**காண் + கு + இல் + அர்** **காண்** –பகுதி, **கு** –சாரியை,<br>**இல்** –எதிர்மறை இடைநிலை, **அர்** –பலர்பால் வினைமுற்றுவிகுதி | 2 x 2 = 4<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2 |

| | | |
|---|---|---|
| | உ) முழங்கிய –**முழங்கு + இ(ன்) + ய் + அ** **முழங்கு** –பகுதி, **இ(ன்)** –இறந்தகால இடைநிலை, **'ன்' கெட்டது** –விகாரம், **ய்** –உடம்படுமெய் சந்தி, **அ** –பெயரெச்சவிகுதி<br>**ஊ)** தேடுகிறாய் –**தேடு + கிறு + ஆய்** **தேடு** –பகுதி, **கிறு** –நிகழ்கால இடைநிலை, **ஆய்** –முன்னிலை ஒருமைவினைமுற்றுவிகுதி. | 1 + 1 = 2<br>1 + 1 = 2 |
| 25 | * **எவையேனும் மூன்றனுக்கு இலக்கணக்குறிப்புத் தருக.**<br>**அ)** திருந்துமொழி –**வினைத்தொகை**<br>**ஆ)** உணர்மின் –**ஏவல் பன்மை வினைமுற்று**<br>**இ)** தழீஇ –**சொல்லிசையளபெடை**<br>**ஈ)** விக்கிவிக்கி –**அடுக்குத்தொடர்**<br>**உ)** பசிக்கயிறு –**உருவகம்**<br>**ஊ)** கன்னிபாலன் –**நான்காம்வேற்றுமைத்தொகை** | 3 x 2 = 6<br>2<br>2<br>2<br>2<br>2<br>2 |
| 26 | * **எவையேனும் இரண்டு தொடர்களைப்பிரித்து புணர்ச்சிவிதி தருக.**<br>**(பிரித்தெழுதுதல் -1மதிப்பெண், விதிகூறுதல் -1மதிப்பெண்)**<br>**அ) யாருமில்லை** – யாரும் + இல்லை<br>**விதி 1: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**<br>**ஆ) நிறையுடைமை** –நிறை + உடைமை<br>**விதி 1: இ ஈ ஐவழி யவ்வும்**<br>– நிறை + ய் + உடைமை<br>**விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**<br>**இ) பெருந்தெய்வம்** – பெருமை + தெய்வம்<br>**விதி 1: ஈறுபோதல்**<br>– பெருந் + தெய்வம்<br>**விதி 2: இனமிகல்**<br>**ஈ) மறவேல்** – மறம் + வேல்<br>**விதி 1: மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்**<br>**உ) வளைத்தோளி** – வளை + தோளி<br>**விதி 1: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**<br>**ஊ) விருந்தொரால்** – விருந்து + ஒரால்<br>**விதி 1: உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்**<br>–விருந்த் + ஒரால்<br>**விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** | 2 x 2 = 4<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2<br>1 + 1 = 2 |
| 27 | **பொருண்மொழிக்காஞ்சித்துறை**<br>* துறை விளக்கம்<br>* சான்றுச்செய்யுள்<br>* துறைப்பொருத்தம் | 1 x 4 = 4<br>1<br>1<br>2 |
| | **(அல்லது)** **குறிஞ்சித்திணை**<br>* முதற்பொருள் (நிலமும் பொழுதும்)<br>* உரிப்பொருள் –புணர்தலும் புணர்தல்நிமித்தமும்<br>* கருப்பொருள் (எவையேனும் ஐந்து)<br>* சான்றுச்செய்யுள்<br>* திணைப்பொருத்தம் | ½<br>½<br>1<br>1<br>1 |
| 28 | **'இன்மையு ளின்மை விருந்தொரால்…' - எடுத்துக்காட்டுவமையணி**<br>* அணிவிளக்கம்<br>* சான்றுச்செய்யுள்<br>* அணிப்பொருத்தம் | 1 x 4 = 4<br>2<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | (அல்லது) சொற்பொருள்பின்வருநிலையணி<br>* அணிவிளக்கம்<br>* சான்றுச்செய்யுள்<br>* அணிப்பொருத்தம் | 2<br>1<br>1 |
| | (அல்லது) தற்குறிப்பேற்றவணி<br>* அணிவிளக்கம்<br>* சான்றுச்செய்யுள்<br>* அணிப்பொருத்தம் | 2<br>1<br>1 |
| **VIII.** | **பொருத்துக.** | 4 x 1 = 4 |
| 29 | இருண்டவீடு - பாரதிதாசன் | 1 |
| 30 | தேன்மழை - சுரதா | 1 |
| 31 | தமிழ் - பிரஞ்சு கையகரமுதலி - வாணிதாசன் | 1 |
| 32 | பூமியைத் திறக்கும் பொன்சாவி - தாராபாரதி | 1 |
| **IX.** | **உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | 16 x 1 = 16 |
| 33 | இ) யுத்தகாண்டம் | 1 |
| 34 | ஆ) மாசி, பங்குனி | 1 |
| 35 | ஆ) 9 அடி முதல் 12 அடி வரை | 1 |
| 36 | ஆ) திருவள்ளுவமாலை | 1 |
| 37 | ஆ) அரசியல், அங்கவியல், ஒழிபியல் | 1 |
| 38 | இ) காதை | 1 |
| 39 | ஆ) சுந்தரன் | 1 |
| 40 | இ) தேம்பாவணி | 1 |
| 41 | ஆ) ஒட்டக்கூத்தர் | 1 |
| 42 | அ) கலம்பகம் | 1 |
| 43 | இ) 14 - 19 | 1 |
| 44 | அ) இது எங்கள் கிழக்கு | 1 |
| 45 | அ) அப்துல்ரகுமான் | 1 |
| 46 | ஆ) வியாசர் | 1 |
| 47 | ஆ) எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை | 1 |
| 48 | அ) உமறுப்புலவர் | 1 |
| **X.** | **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** | 2 + 2 = 4 |
| 49 | ஒறுத்தாரை யொன்றாக **வையாரே** வைப்பர்<br>பொறுத்தாரைப் **பொன்போற்** பொதிந்து | **1+1** |
| 50 | அஞ்சுவ தஞ்சாமை **பேதைமை** அஞ்சுவ<br>தஞ்சல் அறிவார் **தொழில்** | **1+1** |




**ஆக்கம்:**
**முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி,**
**தமிழாசிரியர்,**
**நாடார் மகமை மேனிலைப்பள்ளி,**
**ஏழாயிரம்பண்ணை – 626 201,**
**சாத்தூர்(வழி), விருதுநகர்**
**மாவட்டம்.**
**WhatsApp 7806868246**